496

பாலியர் மித்திரன்

The Children's Friend

...RE SOCIETY FOR INDIA
... RANGOON COLOMBO

CH
0-,35
N3
184441

சென்னை கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கத்தார்

புதிதாய் அச்சிட்ட புத்தகங்கள்

முதற் புத்தகம்	By S. G. Daniel, B.A.	விலை,	$2\frac{1}{2}$	அணா.
இரண்டாம் புத்தகம்	do.	,,	3	,,
மூன்றும் புத்தகம்	do.	,,	4	,,
நான்காம் புத்தகம்	do.	,,	$4\frac{1}{2}$	,,
ஐந்தாம் புத்தகம்	do..	,,	5	,,
பாலர் பாட அனுபந்தம்	do.	,,	3	,,

வித்தியா மாலிகை

பால பாடம்..	....	விலை,	$1\frac{1}{2}$	அணா.
முதற் புத்தகம்	....	,,	3	,,
இரண்டாம் புத்தகம் ..	....	,,	4	,,
மூன்றும் புத்தகம்	....	,,	$4\frac{1}{2}$	,,
நான்காம் புத்தகம்	....	,,	5	,,
ஐந்தாம் புத்தகம்	....	,,	7	,,

C. L. S. தமிழ் வாசக புத்தகங்கள்

முதற் பாடம்	....	விலை,	$1\frac{1}{2}$	அணா.
முதலாம் வாசக புத்தகம்	....	,,	3	,,
இரண்டாம் வாசக புத்தகம்	....	,,	4	,,
மூன்றும் வாசக புத்தகம்	....	,,	4	,,
நான்காம் வாசக புத்தகம்	....	,,	$4\frac{1}{2}$	,,
ஐந்தாம் வாசக புத்தகம்	....	,,	5	,,
ஆறும் வாசக புத்தகம்	....	,,	5	,,

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
Post Box 501, Park Town, Madras

No. 7. ஜூலை 1931

பாலியர் மித்திரன்



பெரிய கப்பல்

'கேளுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்று இயேசு இரட்சகர் சொன்னார்.

VOL. LXXIV.

திருஷ்டிய பரிசுத்த வசனத்தில் வேறொரு இடத்தில் 'ஒருவன் விசுவாசத்தோடு கேட்கவேண்டும்' என்றும் சொல்லியிருக்கிறது. 'விசுவாசமில்லாமல் கடவுளுக்குப் பிரியமாயிருக்கக்கூடாது' என்று வேதவசனம் சொல்லுகிற அந்த விசுவாசம் எப்படிப்பட்டது? நமது கடவுள் தம்மை நோக்கி ஜெபிக்கிற எல்லாருக்கும் உதவிசெய்து சம்பூரணமாய்க் கொடுக்கிற நன்மையும் உண்மையுமுள்ள தேவன் என்று நம்புவதே விசுவாசமாம். 'என் நாமத்தில் நீங்கள் விசுவாசித்து எதற்காக ஜெபித்தாலும் அதைப் பெறுவீர்கள்' என்று நமது கர்த்தர்தாமே சொல்லியிருக்கிறார். எல்லா மனுஷரிடத்திலும் இந்த விசுவாசம் காணப்படுகிறதில்லை. அவர்களுடைய பொல்லாத இருதயம் கடவுளை உண்மையாய் அறிகிறதில்லை. அவர்கள் இருதயத்தில் பாவம் நிறைந்திருப்பதால், அவர்கள் நடுங்கி பயந்து கடவுள்மேல் நம்பிக்கைவைக்காமல் போகிறார்கள். கடவுள் நம்மை நோக்கிக் கூப்பிட்டு, நமக்குக் கஷ்டமாய்த் தோன்றுகிறவைகளைச் செய்ய கட்டளையிட்டால், நமது பலவீன கலக்கம் நிறைந்த இருதயத்தோடு சிந்தியாமல், அவர் நமக்கு உதவி செய்வார் என்று நம்பி உடனே கீழ்ப்படிந்து அவர் சொன்னபடியே நடக்கவேண்டும்; அப்போது நாம் செய்வது நன்றாய்ச் செய்யப்படும். இதைத் தெளிவாக்க ஒரு பட்சமுள்ள தகப்பன் தன் பிள்ளைக்குச் செய்ததை இங்கே கூறுவோம்:—

ஒரு தகப்பனுக்கு ஒரு புத்திரி இருந்தாள். அவள் நொண்டியாய் இருந்தபடியால், நடக்கக் கூடாமலிருந்தாள். ஒருநாள் தகப்பன் அவளை நோக்கி: என் புத்திரியே, இங்கே என்னிடம் வா என்றான். அவள் அவனைப் பார்த்து: அப்பா! நான் வரமுடியாது என்றாள். மறுபடியும் அவன் தன்னிடம் வரும்படி அவளை அழைத்தான். அப்போது அவள்: அப்பா! நான் வரமுடியாது, நான் நடக்க முடியாத சப்பாணியென்று உங்களுக்குத் தெரியாதா? என்றாள். தகப்பனோ: மகளே! நடக்கப் பார், நான் உனக்கு உதவிசெய்வேன் என்றான். அப்படியே அவள் தகப்பன் சொன்னதைக் கேட்டு நடக்க எத்தனிக்கையில், அவன் தன் கையை நீட்டிப் பிடித்து தன் மார்போடு அணைத்துக்கொண்டான்.

இயேசு இரட்சகரும் சூம்பின கையுடைய மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார். அவன் அவர் சொன்னதை நம்பி, கையை நீட்டி சுகமடைந்தான் (மாற்கு 3: 5). இயேசு நம்மை என்ன செய்யச் சொல்லுகிறாரோ அதைச் செய்ய பலத்தையும் கொடுக்கிறார். பின்பு அன்புடன் அவர் அதற்குப் பதிலையும் அளிக்கிறார்.

அவரை நோக்கி ஜெபித்த ஒரு நீகிரோ பையனின் விசுவாசத்தைக் கண்டு அவர் பதிலளித்த சரித்திரமாவது:—ஒரு நல்ல எஜமானுக்கு ஒரு

அடிமை இருந்தான். அவன் நீகிரோவாகிய ஒரு காப்பிரி பையயன். அவன் வீட்டுக்கு அநேக மிஷனெரிகள் வருவதும் போவதுமாய் இருந்தார்கள். அவர்கள் அந்த சிறுவனுக்கு எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொடுத்தார்கள். அவன் சத்திய வேதத்தை வாசிக்க ஆரம்பித்து, கடவுள் நமக்குப் பிதா என்பதை அறிந்துகொண்டான். சீக்கிரத்தில் அவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு முதலியவர்களின் சரித்திரத்தை வாசித்து அவர்கள் விசுவாசம் பெரிதென்று அறிந்தான். இயேசு கிறிஸ்து பாவிகளை இரட்சிக்க பூலோகத்தில் வந்தார் என்பதைத் திட்டமாய்த் தெரிந்துகொண்டான். இயேசு சிறுபிள்ளைகளை நேசிக்கிறார் என்று அவன் அறிந்து, தானும் அவரை அதிகமாய் நேசித்தான். அந்த காப்பிரி பையன், இந்த அறிவினால் சந்தோஷமடைந்து, தன் இரட்சகராகிய இயேசுவுக்கே தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்தான். கிறிஸ்தவனாய் இருப்பதும், நடப்பதும் எவ்வளவு பாக்கியமென்று அவன் அறிந்ததும், தன் தகப்பனும் தாயும் ஒரு கப்பலில் ஏறிவரமாட்டார்களா? என்று அதிகமாய் ஆசித்தான். ஏனெனில் அவன் வெகு தூரத்தில் இருந்து ஒரு கப்பலில் அடிமையாய்க் கொண்டுவரப்பட்டான். இப்போது தான் கிறிஸ்தவனாய் இருப்பதுபோல, தன் தகப்பனும் தாயும் இருக்க விரும்பினான். இதற்காக அவன் ஓயாமல் ஜெபித்தான்.

ஒருநாள் அவன் ஜெபத்தில் பின்வருமாறு சொன்ஞன்:—என்னை இரட்சித்த கடவுளே! உமக்கு தோத்திரம். என்னை இரட்சிக்கும்படி ஒரு பெரிய கப்பலை என் ஊருக்கு அனுப்பி, இங்கே கொண்டு வந்தீர். இதோ! நான் உம்மை அறிந்ததால் எவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறேன். அப்படியே முன்னிலும் ஒரு பெரிய கப்பலை என் ஊருக்கு அனுப்பி, என் தகப்பனையும், தாயையும் இங்கே கொண்டுவந்திரட்சியும். அவர்கள் என்னைப்போல உமது அன்பை அறிந்து இரட்சிக்கப்பட ஆசிக்கிறேன். நீர் சர்வவல்லமையுள்ள கடவுளாதலால் இது உம்மால் கூடாததல்ல என்று விசுவாசத்தோடு முடித்தான். அவன் தகப்பனும் தாயும் கடவுளை அறியாத அஞ்ஞானிகளாய் இருந்தார்கள்.

அந்தச் சிறுவன் அப்படி ஜெபித்தபின், ஓயாமல் கடற்கரைக்குப் போய் கடவுள் தான் ஜெபித்ததின்படி கப்பலை அனுப்பமாட்டாரா, தன் தகப்பனும் தாயும் அதில் இருக்கமாட்டார்களா என்று ஆவலோடு காத்துக்கொண்டிருந்தான். ஏறக்குறைய இரண்டு வருஷகாலமாய் ஒவ்வொரு நாளும் கடற்கரைக்குப் போய் தன் தகப்பனும் தாயும் கப்பலில் வந்தார்களா என்று வருகிற ஒவ்வொரு கப்பலையும் பார்த்துவந்தான். ஒருநாள் அவன் சந்தோஷத்தோடு வீட்டுக்கு ஓடிவந்து, அதிக உற்சாகமாய்க் குதித்துத் துள்ளினன். அவன் சந்தோஷத்திற்குக் காரணம் என்ன என்று எஜமான் கேட்டபோது:

ஐயா, என் ஏழை ஜெபத்தைக் கடவுள் கேட்டார். இப்போது வந்த கப்பலில் என் தாயும் தகப்பனும் வந்திருக்கிறார்கள் என்றான். அவன் தன் பெற்றோரைத் தன் சிறு அறைக்குக் கொண்டுவந்து இயேசுவே இரட்சகர் என்று ஓயாமல் போதித்து குணப்படுத்தினான்.

இந்த சிறுவன் ஏறக்குறைய எழுநூறு அல்லது எண்ணூறு விசை கடற்கரைக்குப் போய், கப்பல் வருவதற்காக காத்திருந்தான். அவன் விசுவாசத்தோடு போனான், விசுவாசத்தில் பலத்திருந்தான், விசுவாசத்தால் பொறுமையோடு காத்திருந்தான். ஆகையால் கடவுள் அவனுக்குப் பெரிய பலன் அளித்து, அவன் இருதயத்தைச் சந்தோஷப்படுத்தினார். இப்படிப்பட்ட விசுவாசமே சிறுவராகிய உங்களுக்கும் வேண்டும். நீங்கள் அதை இயேசுவினிடம் கேட்டால் தடையில்லாமல் பெறுவீர்கள். 'கேளுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்' (மத். 7: 7).

வேதபாலியர் கதை

3. அடிமையான சிறுவன் அதிகாரியான கதை

(5) யோசேப்பு தன் சகோதரருக்கு விருந்து பண்ணினது

யோசேப்பின் சகோதரர் எகிப்திலிருந்து கொண்டுவந்த தானியம் செலவானதும், அவர்கள்

தகப்பன் அவர்களை நோக்கி: எகிப்துக்குப் போய் தானியம் வாங்கி வாருங்கள் என்றான்.

அதற்கு அவர்கள்: எங்கள் இளைய சகோதரனை நீர் எங்களோடு அனுப்பினாலொழிய நாங்கள் போக முடியாது. எகிப்தின் அதிகாரி, இளைய சகோதரனை நீங்கள் கொண்டுவராவிட்டால் என் முகத்தைப் பார்ப்பதில்லை என்று கண்டிப்பாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்கள்.

தகப்பன்: இன்னொரு கடைசி இளைய சகோதரன் உங்களுக்கு இருக்கிறான் என்று சொல்லுவானேன், அவனைக் கொண்டுவர அவன் கட்டளையிடுவானேன் என்றான்.

சகோதரர், அந்த அதிகாரி எங்களை நோக்கி: உங்கள் தகப்பன் உயிரோடிருக்கிறாரா, உங்களுக்கு இன்னும் இளைய சகோதரனுண்டா என்று கேட்டான். உங்கள் சகோதரனை இங்கே கொண்டு வாருங்கள் என்று சொல்லுவான் என்பதை நாங்கள் அறிந்தோமா என்றார்கள்.

தகப்பன் என்ன செய்வதென்று தெரியாமல் தன் கடைசி மகனாகிய பென்யமீனை அனுப்ப ஒத்துக்கொண்டான். மேலும் அந்த அதிகாரியைப் பிரியப்படுத்த, அத்தேசத்து உசிதமான வஸ்துக்களில் கொஞ்சம் பிசின் தைலமும் தேனும் சூந்த வர்க்கமும் வெள்ளைப்போளமும் வாதுமைக்கொட்டைகளும் அனுப்பினான். தன் மக்கள் எகிப்துக்குப் புறப்படும்போது, கடைசி மகனையும் கூட்டி

யனுப்பி: பணத்தை இரட்டிப்பாய் உங்கள் கைகளில் கொண்டுபோங்கள். முன் சாக்குகளில் திரும்பிவந்த பணம் கைப்பிசகாய் வந்திருக்கலாம். எகிப்திலிருக்கும் உங்கள் சகோதரனையும் இந்த இளைஞனையும் சுகமாய்த் திரும்பிவரப்பண்ண கடவுள் உங்களுக்குத் துணை செய்வாராக என்று வாழ்த்தி அனுப்பினான்.

சகோதரர் அந்த காணிக்கையையும் கைகளில் இரட்டிப்பான பணத்தையும் எடுத்துக்கொண்டு போனார்கள். அவர்கள் எகிப்தைச் சேர்ந்ததும் யோசேப்புக்குமுன் பணிந்து நின்றார்கள். அவர்களோடு பென்யமீன் வந்திருக்கிறதைக் கண்டு, யோசேப்பு தன் வீட்டு விசாரணைக்காரனை நோக்கி: இந்த மனிதரை வீட்டுக்கு அழைத்துப்போய், சாப்பாட்டுக்கு வேண்டியவைகளை அடித்து ஆயத்தம்பண்ணு. மத்தியானத்திலே இவர்கள் என்னோடே சாப்பிடுவார்கள் என்றான். அப்படியே அவர்களை அவன் யோசேப்பின் அரமனைக்கு அழைத்துக்கொண்டு போகையில், அவர்கள் வீட்டு விசாரிப்புக்காரனைப் பார்த்து: ஐயா, நாங்கள் இரட்டிப்பான பணம் கொண்டுவந்திருக்கிறோம். போனமுறை எங்கள் சாக்குகளில் பணம் வைத்தது யாரென்று அறியோம். பணத்தை வாங்கிக்கொள்ளும் என்றார்கள்.

அவனோ அவர்களைத் தைரியப்படுத்தி: நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நீங்கள் கொடுத்த

பணம் என் கைக்குச் சரியாய் வந்துவிட்டது என்று சொன்னான். பின்பு அவன் எகிப்திலே கட்டுண்டிருந்த அவர்கள் சகோதரனைக் கொண்டு வந்து விட்டு, கால்களைக் கழுவும்படி தண்ணீர் கொடுத்து, கழுதைகளுக்குத் தீனிபோட்டான்

யோசேப்பின் வீட்டுக்குள் அவர்கள் கொண்டு போகப்பட்டபோது, முன்னே நம்முடைய சாக்கு களில் இருந்த பணத்தினிமித்தம் நம்மேல் குற்றம் சுமத்தி, நம்மைப் பிடித்துச் சிறையிலடைக்கப் போகிறார்கள் என்று பயந்திருந்தார்கள். இப் போது அவர்கள் பயந்தெளிந்து, அங்கே போஜனம் செய்யப்போகிறதைக் கேள்விப்பட்டு, சந்தோஷமா யிருந்தார்கள். யோசேப்பு வருமளவும் தாங்கள் கொண்டுவந்த காணிக்கைகளை ஆயத்தமாய் வைத் துக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

யோசேப்பு வீட்டுக்கு வந்தபோது, அவர்கள் தாங்கள் கொண்டுவந்த காணிக்கையை அவன்முன் வைத்து தரைமட்டும் குனிந்து வணங்கினார்கள். தான் சிறுவனாயிருக்கையில், தன் அரிக்கட்டு வய வில் நிமிர்ந்து நிற்கையில், மற்ற சகோதரரின் அரிக் கட்டுகள் அதை வணங்கினதாக கண்ட சொப் பனம் யோசேப்புக்கு அப்போதும் ஞாபகத்தில் வந் திருக்கலாம்.

அவன் அவர்கள் சுகசெய்தியை விசாரித்து, அவர்களை நோக்கி: நீங்கள் சொன்ன முதிர் வயதான உங்கள் தகப்பன் சுகமாயிருக்கிறாரா,

அவர் இன்னும் உயிரோடிருக்கிறாரா என்று கேட்டான். உடனே அவர்கள்: எங்கள் தகப்பனார் சுகமாயிருக்கிறார், இன்னும் உயிரோடிருக்கிறார் என்று சொல்லி, குனிந்து வணங்கினார்கள். அவர்களோடு நின்ற கடைசி சகோதரனையும் பார்த்து: நீங்கள் எனக்குச் சொன்ன உங்கள் இளைய சகோதரன் இவன்தானா என்று கேட்டு: மகனே, கடவுள் உனக்குக் கிருபை செய்வாராக என்றான்.

யோசேப்பு இவ்வளவு பேசினதும் அவன் உள்ளம் பொங்கிற்று, அழுகையும் வந்தது. உடனே அவன் எழுந்திருந்து, ஒரு அறைக்குட் சென்று அழுதான். பின்பு தான் அழுததை ஒருவரும் அறியாதபடி முகத்தைக் கழுவிக்கொண்டு வெளியே வந்து, வேலைக்காரரைக் கூப்பிட்டு பந்தி பரிமாறும்படி சொன்னான்.

யோசேப்பின் சகோதரர் அவரவர் வயசின்படியே வரிசையாய் உட்கார வைக்கப்பட்டார்கள். அந்த எகிப்தின் அதிபதி தங்கள் வயசின்படி தங்களை உட்கார வைத்ததற்காக ஆச்சரியப்பட்டார்கள். அவன் தனக்குமுன் வைக்கப்பட்ட போஜனத்தில் பங்கிட்டு அனுப்பினான். இளைய சகோதரனின் பாகம் எல்லாரிலும் அதிகமாயிருந்தது. சகோதரர் முன் யோசேப்பின்மேல் பொறாமைப்பட்டதுபோல, இப்போது பொறாமையடையாமல் புசித்துக் குடித்துச் சந்தோஷமாயிருந்தார்கள்.

பின்பு வீட்டு விசாரணைக்காரனை நோக்கி: நீ இந்த மனிதருடைய சாக்குகளை அவர்கள் ஏற்றிக் கொண்டு போகத்தக்க பாரமாய்த் தானியத்தாலே நிரப்பி, அவனவன் பணத்தை அவனவன் சாக்கின் வாயிலே போட்டு, இளையவனுடைய சாக்கின் வாயிலே வெள்ளிப் பாத்திரமாகிய என் பான பாத்திரத்தையும் தானியத்துக்கு அவன் கொடுத்த பணத்தையும் போடு என்றான். அவன் அப்படியே செய்து சாக்குகளைக் கட்டிவைத்தான்.

மறுநாள் விடியற்காலத்தில் சகோதரர் தங்கள் கழுதைகள்மேல் தானியம் நிறைந்த சாக்குகளை ஏற்றிக்கொண்டு போனார்கள். அவர்கள் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டு வெகுதூரம் போகு முன்னே யோசேப்பு, வீட்டு விசாரிப்புக்காரனை நோக்கி: நீ ஓடிப்போய் அவர்களைப் பின்றொடர்ந்து, அவர்களைப் பிடித்து "நீங்கள் நன்மைக்குத் தீமை செய்ததென்ன" என்று கேள் என்றார்.

சகோதரர் சந்தோஷமாய் ஒருவரோடொருவர் பேசி வழிநடந்துபோகையில், பின்னாலே ஒருவன் ஓட்டமாய் ஓடிவரக் கண்டார்கள். அவன் யாரென்று பார்த்தபோது, அதிபதியின் வேலைக்காரனென்று அறிந்துகொண்டார்கள்.

அவ்வேலைக்காரன் அவர்களைப் பார்த்து: நீங்கள் உண்ட சோற்றுக்கு இரண்டகம் பண்ணுவதுபோல் என் எஜமானுடைய வெள்ளிப்பாத்திரத்தை எடுத்

துக்கொண்டு வந்ததென்ன? இப்படியும் நீங்கள் செய்யலாமா என்றான்.

இதைக் கேட்டதும் அவர்கள் திடுக்கிட்டு: எங்கள் ஆண்டவன் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறதென்ன? இப்படிப்பட்ட தகாத செய்கைக்கும் உம்முடைய அடியாராகிய எங்களுக்கும் வெகுதூரம். முந்தி எங்கள் சாக்குகளின் வாயிலே நாங்கள் கண்ட பணத்தைக் கானான் தேசத்தி லிருந்து திரும்பவும் உம்மிடத்தில் கொண்டுவரவில்லையா? உமது அடியாருக்குள்ளே அது எவனிடத்தில் காணப்படுமோ அவன் கொலையுண்ணக்கடவன். நாங்களும் எங்கள் ஆண்டவனுக்கு அடிமைகளாவோம் என்றார்கள்.

அதற்கு வீட்டு விசாரணைக்காரன்: எல்லாரும் தண்டிக்கப்பட வேண்டியதில்லை. பாத்திரம் யாரிடத்தில் காணப்படுமோ அவன் தண்டிக்கப்படுவான். மற்றவர்கள் தாராளமாய்ப் போகலாம் என்று சொல்லி, சாக்குகளைத் திறந்துவைக்கச் சொன்னான். அப்படியே மூத்தவன் முதல் இளையவன்மட்டும் தங்கள் சாக்கைத் திறந்து காட்டினார்கள். கடைசியாய் அந்த பாத்திரம் எல்லாருக்கும் இளைய சகோதரன் சாக்கில் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அவர்களுக்குள் உண்டான துக்கமும் கலக்கமும் அதிகப் பெரிதாய் இருந்தது.

முந்தி யோசேப்பை விற்றுப்போட கடின மனதாயிருந்தவர்கள் இப்போது இந்த இளைய சகோ

VILLAGE SERIES

TAMIL

	A	P
No. 1. Jesus Opens the Eyes of the Blind Beggar. இயேசு பிச்சைக்காரக் குருடனின் கண்ணைத் திறந்தது. (பக்கம் 8)	0	1
No. 2. 'Who are Blessed.' பாக்கியவான்கள் யார்? (பக்கம் 6) .... No. 3. The Bravery of Sogoro. சோகோ ரோவின் தைரியம். (பக்கம் 6)	0	1
No. 4. What Do You Buy in the Drink Shop? சாராயக்கடையில் எதை வாங்கலாம்? (பக்கம் 16)	0	1
No. 5. Some Ancient Good Sayings. பழைய காலத்து நல்மொழிகள். (பக்கம் 16)	0	1
No. 6. The Excellent Offerings of Three Poor Women. மூன்று ஏழை ஸ்திரீகள் கொடுத்த உத்தம காணிக்கை. (பக்கம் 16)	0	1
No. 7. Father Damien the Lepers' Friend. தாமியன் சுவாமியார் குஷ்டரோகிகளின் நேசன். (பக்கம் 16)	0	1
No. 8. The Teaching of Jesus about The Growing Grain. வளரும் பயிர்—இதைப் பற்றிய இயேசுவின் போதனை. (பக்கம் 20) ..	0	2
No. 9. The Story of Christopher. கிறீஸ்தோபேரின் சரித்திரம். (பக்கம் 16)	0	1
No. 10. Sore Eyes. கண்ணோய். (பக்கம் 12).	0	1
No. 11. The Mosquito—our Enemy. கொ[illegible] என்னும் நமது சத்துரு. (பக்கம் 20)..	0	2

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
Post Box 501, Park Town, Madras

பாலியர் மித்திரன்

THE CHILDREN'S FRIEND

(Formerly called The Mission School Magazine)

THE **Paliar Mittiran** is a bright Magazine for children containing stories, anecdotes, nature studies and object-lessons and pages in large type for those in the lowest classes edited by Rev. V. Vedanayagam, Madras. The subscription (exclusive of postage) is *one anna* for one copy a month for twelve months.

பாலியர் மித்திரன். சிறுவர்க்கேற்ற இப்பத்திரிகையில் சரித்திரங்களும், விநோதமான பொருட்பாடங்களும், படிக்க ஆரம்பிக்கிறவர்களுக்குப் பெரிய அட்சரங்களில் சில கதைகளும் அடங்கியிருக்கிறதினாலே பிள்ளைகள் இதை ஆவலாய் வாசிப்பார்கள். இதின் விலை:

வருஷம் பிரதி ஒன்றுக்கு தபாற்கூலி இல்லாமல் கையொப்பம் அணா 1.

ஒரே மேல்விலாசத்திற்கு அநேக பிரதிகள் அனுப்பப்படும் பக்ஷத்தில், தபாற்கூலி மிகவும் குறையும்.

மாதர் போதினி

THE MAGAZINE FOR THE HOME

THE **Mathar Bodhini** provides pure and attractive reading for the family circle. Teachers in Girls' Schools, Bible-women and Zenana workers will find it specially helpful.

மாதர் போதினி என்னும் பத்திரிகையில் பெரியோர்களின் ஜீவிய சரித்திரங்களும், சுகவழியைப்பற்றிய போதனைகளும், மதுபானத்திற்கு விரோதமான எச்சரிக்கைகளும், பல கதைகளும், உபமானங்களும் அடங்கியிருப்பதினால் குடும்பத்தில் யாவரும் இதை விருப்பத்தோடு வாசிப்பார்கள். பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் கல்வி கற்றுக்கொடுக்கும் வேதாகம ஸ்திரீகளுக்கும் உபாத்திச்சிமார்களுக்கும் இது விசேஷமாய் உபயோகமுள்ளது. இதின் விலை:

வருஷம் பிரதி ஒன்றுக்கு தபாற்கூலி இல்லாமல் கையொப்பம் அணா 6.

ஒரே மேல்விலாசத்திற்கு அநேக பிரதிகள் அனுப்பப்படும் பக்ஷத்தில், தபாற்கூலி மிகவும் குறையும்.

கடிதங்கள், கையொப்பப்பணம் அனுப்புவோர் அவைகளை அடியிற்கண்ட மேல்விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

CHRISTIAN LITERATURE SOCIETY, POST BOX 501, MADRAS